Embassy of the United States of America
Colombo
PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: shenjy@state.gov ● http://srilanka.usembassy.gov

Release No. 20160520-2T

# வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூன்று வருட நிகழ்ச்சியை உதவியாக வழங்கும் அமெரிக்கா

**மே 20, 2016:** இலங்கையின் மேற்குப் பகுதியில் கடுமையான வெள்ளப்பெருக்கு பாதிப்பினைத் தொடர்ந்து, போர்வைகள், படுக்கைகள், ஆடைகள் மற்றும் புறச்சுகாதாரப் பொதிகள் போன்ற உணவுசாராத பொருட்களுக்கான உடனடி அனர்த்த உதவியாக 7.2 மில்லியன் இலங்கை ரூபாய்களை அமெரிக்க அரசாங்கம் வழங்கியது.

மேலதிகமாக, சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவன அலுவலகத்தின் வெளிநாட்டு அனர்த்த உதவி அலுவலகத்துடன் இணைந்து கொழும்பு அமெரிக்கத் தூதரகமானது வெள்ளப்பெருக்கு மற்றும் வரட்சியினால் அதிகளவில் பாதிக்கப்படக் கூடிய சனத்தொகைக்கு பாதுகாப்பான, அனர்த்தத்திற்கு-நெகிழ்வான, குடிநீரை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட அண்ணளவாக இலங்கை ரூ. 144 மில்லியன் (1 மில்லியன் அமெரிக்க டொலர்) மொத்த பெறுமதியான புதிய மூன்று வருட நிகழ்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கான திட்டங்களை மேம்படுத்தி, துரிதப்படுத்தவுள்ளது. இந்த புதிய நிகழ்ச்சியானது இயற்கை அனர்த்தங்களின் போது உகந்த நீருக்கான நம்பகமான அணுகும் வசதிக்கு மேலதிக நெகிழ்வுத் தன்மையை வழங்குவதுடன், அதற்கான தேவையை அடையாளம் காணவும் உதவும்.

“இலங்கையர்கள் மற்றும் அமெரிக்கர்களுக்கு இடையிலான நீண்டகால நட்புறவினையும், எமது இரண்டு அரசாங்கங்களுக்கு இடையிலான வளரும் பங்காளித்துவத்தினையும் பேணும் வகையில் இந்த உதவி அமைந்துள்ளது” என தூதுவர் அதுல் கேஷப் குறிப்பிட்டார்.

தற்போதைய அனர்த்த சூழ்நிலையை கண்காணித்து வரும் தூதரகம் மேலதிகத் தேவைகளை கண்டறிவதற்கு இலங்கை அரசாங்கத்தின் அனர்த்த நிவாரண அதிகாரிகளுடன் தொடர்ந்து நெருக்கமாக செயற்பட்டு வருகின்றது.

##